**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.79/2020**
**Prosecution Witnesses: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வலிங்கம் | Caste | : |
| Father Name/ Husband Name | : பெரியபாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி முன்பு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)
**(30.09.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவககாசி விசுவநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன தங்கம் என்பவர் எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரி எனது அப்பா ஆவார். கடந்த 2018வது வருடம் 3 வது மாதம் 28ம் தேதி நான் கள்ளிக்குடியில் இருந்து சிவகாசிக்கு இருசக்கர வாகனத்தில் கிளம்பி கொண்டிருந்தேன். அப்போது எனக்கு முன்னால் எனது அம்மாவும் அப்பாவும் இருசக்கர வாகனத்தில் சென்றும் கொண்டிருந்தார்கள். மையிட்டான்பட்டியை தாண்டி உள்ள டீ கடை அருகே நாய் குறுக்கே வந்ததால் எனதுஅப்பா அவரது வண்டியை பிரேக் போட்டு நிறுத்தியபோது எனது அம்மா நிலை தவறி கீழே விழுந்துவிட்டார். எனது அம்மாவுக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. எனது மனைவி எனது அப்பா மற்றும் நான் ஆகிய 3 பேரும் சேர்ந்து எனது அம்மாவை VVV மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக அரசு

ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சிகிச்சையில் இருந்த எனது அம்மா 2 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**